الدرس الثاني

ثبوت دخول رمضان

பாடம் - 2

## ரமழானை உறுதி செய்தல்

ரமழான் வருகை இரு காரியங்களால் உறுதியாகும்:

1.ரமழான் பிறைபார்ப்பது: பிறை பார்க்கப்பட்டால் நோன்பு கடமையமாகி விடும்.

عَنْ ابْنِ عُمَرَ ﷺ عن النبي ﷺ قال: إِذَا رَأَيْتُمُ الهِلَالَ فَصُومُوا، وَإِذَا رَأَيْتُمُوهُ فَأَفْطِرُوا (خ/ ١٩٠٠، م/ ١٠٨٠)

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'நீங்கள் பிறையைப் பார்த்தால் நோன்பு வையுங்கள். நீங்கள் பிறையைப் பார்த்தால் நோன்பை விட்டுவிடுங்கள்.' அறிவிப்பவர் அபுஹுரைரா(ரலி), நூல்: புகாரி-1900, முஸ்லிம்-1080

ரமழான் மாதத்தை உறுதி செய்வதற்கு நீதமான ஒருவர் பிறை பார்ப்பது போதுமானது. ஷவ்வால் பிறையைக் கண்டு நோன்பை விடுவதற்கு நீதமான இருவர் பிறை பார்ப்பது கட்டாயமாகும்.

2.ஷஃபான் மாதத்தை 30 நாட்களாகப் பூர்த்தியாக்குவது:

ஷஃபான் மாதம் 30 நாட்கள் பூர்த்தியாகிவிட்டால். 31 வது நாள் ரமழானின் முதல் நாளாகும்.

((فَإِنْ غُمَّ عَلَيْكُمْ فَأَكْمِلُوا الْعِدَّةَ ثَلَاثِينَ)) (خ/ ١٩٠٧)

'நீங்கள் பிறை பார்க்க முடியாத அளவுக்கு மேகமூட்டம் இருந்தால் மாதத்தின் எண்ணிக்கையை முப்பதாகப் பூர்த்தியாக்குங்கள்.' (புகாரி - 1907)

### நோன்பை விடுவதற்கு சலுகை அளிக்கப்பட்டவர்கள்:

1. நோய் குணமடைந்து விடுவதை எதிர்பார்க்கப்படும் நோயாளி: இவருக்கு நோன்பு நோற்பது சிரமமாக இருந்தால் நோன்பை விட்டுவிட இவருக்கு சலுகை வழங்கப்படுகிறது. விடுபட்ட நோன்பை இவர் பின்னர் கழா செய்ய வேண்டும். எனினும் தனது நோய் நீங்கிவிடுமென எதிர்பார்க்க முடியாத நிரந்தர நோயாளிக்கு நோன்பு நோற்பது கட்டாயமில்லை. அவர்ஒவ்வொரு நாளும் ஒரு ஏழைக்கு $1_{1/2}$ கி. உணவு வழங்க வேண்டும். அல்லது விடுபட்ட நோன்புகளின் எண்ணிக்கை அளவு ஏழைகளை அழைத்து (ஒரே நேரத்தில்) உணவு வழங்க வேண்டும்.
2. பயணி: ஒரு பயணி தனது ஊரில் இருந்து புறப்பட்டுத் திரும்பி வரும் வரை நோன்பை விட்டுவிட சலுகையளிக்கப்படுகிறார். இச்சலுகை அங்கும் தங்கும் எண்ணமின்றி அவர் அங்கு இருக்கும் வரையாகும்.எந்த நோக்கத்திற்காகப் பயணம் மேற்கொண்டாரோ அந்த நோக்கம் முடிந்த பின் அங்கு தங்குவதில்லை என்ற எண்ணத்துடன் அங்கு இருக்கும் வரை அவர் பயணத்திலேயே இருக்கிறார்.
3. கர்ப்பிணி, பாலூட்டும் தாய்: இவ்விரு வரும் தமக்கோ தம் குழைந்தைக்கோ இடையூறு ஏற்படுமெனப் பயந்தால் நோன்பை விட்டுவிட அனுமதிக்கப்படு கிறார்கள். காரணம் நீங்கிவிட்ட பின்னர் விடுபட்ட நோன்பை அவர்கள் கழாச் செய்ய வேண்டும்.
4. முதியவர்: இவர் நோன்பு பிடிப்பது சிரமமாக இருந்தால் நோன்பை விட்விட சலுகை அளிக்கப்படுவார். ஆனால் இவருக்கு கழா கிடையாது. மாறாக ஒவ்வொரு நாளும் ஒரு ஏழைக்கு இவர் உணவு கொடுக்க வேண்டும்.